1993 ஏப்ரல் 16]

372—

ஒட்டன் சத்திரம் - தாராபுரம் சாலையை அகலப்படுத்தல்

*11402—திரு. ஏ. டி. செல்லசாமி: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒட்டன்சத்திரம் முதல் தாராபுரம் வரையுள்ள சாலையை தேசியநெடுஞ்சாலைத் திட்டத்தின்கீழ் அகலப்படுத்திட அரசு விரைந்து நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், ஏற்படும் செலவினம் எவ்வளவு?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இச்சாலையை தேசிய நெடுஞ்சாலையாக மாற்றுகின்ற அளவுக்கு முக்கியத்துவம் பெறவில்லை. எனினும், இச்சாலையை அகலப்படுத்தும் பணி இப்போது நடைபெற்று வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஏ. டி. செல்லசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒட்டன் சத்திரம் முதல் தாராபுரம் வரையுள்ள சாலையை தேசிய நெடுஞ்சாலை திட்டத்தின்கீழ் ஒரே ஆண்டில் அகலப்படுத்திக் கொடுத்ததற்கு மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் ஒட்டன் சத்திரம் தொகுதி மக்கள் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 373, திரு. எஸ். அண்ணாமலை, திரு. பி. ஆர். எஸ். வெங்கடேசன், திரு. எ. தெய்வநாயகம், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர்.

373—

பரங்கிமலை, பழவந்தாங்கல் சுரங்கப்பாதை அமைக்கும் பணி.

*11513—திரு. எஸ். அண்ணாமலை, திரு. பி. ஆர். எஸ். வெங்கடேசன், திரு. எ. தெய்வநாயகம்:

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பரங்கிமலை மற்றும் பழவந்தாங்கல் சுரங்கப்பாதை பணிகள் நடைபெற்றுவரும் தற்போதைய நிலையில் சில தனியார்கள்

தங்களது நிலங்களை கையகப்படுத்துவதாகப் பெற்ற நீதிமன்ற தடையாணையை பொதுமக்கள் நலன் கருதி அகற்ற (vacate) அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பரங்கிமலை அருகில் சுரங்கப்பாதை அமைக்கும் பணியில் நீதிமன்ற தடையாணையை அகற்ற நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டுள்ளன. பழவந்தாங்கல் சுரங்கப்பாதை அமைப் பதில் நிலங்கள் கையகப்படுத்தும் பணி தீவிரமாக நடைபெற்று வருகிறது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். அண்ணாமலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியில் முக்கியமாக எல்லா மக்களும், அந்தத் தொகுதியில் இருக்கிற மக்கள் அத்தனை பேரும், தலைமைச் செயலகத்திலும், சென்னையில் இருக்கிற தொழிற்சாலைகளிலும், அரசு அலுவலகங்களிலும் பணியாற்று கிறார்கள். பரங்கிமலை மற்றும் பழவந்தாங்கல் சுரங்கப்பாதை பணிகள் நடைபெற்று வரும் தற்போதைய நிலையில் சில தனி யார்கள் தங்களது நிலங்களை கையகப்படுத்தப்படுவதாகப் பெற்ற நீதிமன்ற தடையாணையை பொதுமக்கள் நலன் கருதி அகற்ற அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-45

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப்பணி சம்பந்தமாக மாண்புமிகு சட்ட மன்ற உறுப்பினர் அண்ணாமலை அவர்கள் என்னுடைய கவனத் திற்குக் கொண்டு வந்தபோதே நானும் அவரும் அந்த இடத்தை நேரிலே சென்று பார்வையிட்டோம். தனியார்கள் சில பேர் அந்த நிலத்தை கையகப்படுத்துவதற்கு எதிராக நீதிமன்றங் களில் தடையாணையைப் பெற்று காலதாமதம் செய்துகொண் டிருக்கின்ற நிலையைத் தவிர்க்க வேண்டுமென்று உடனடியாக அதிகாரிகளை அழைத்து சம்பந்தப்பட்ட நம்முடைய வழக்கறிஞர்களை எல்லாம் அழைத்து உடனடியாக அந்தத் தடையாணையை நீக்க வேண்டும் என்பதை அரசின் சார்பிலே தெரிவித்திருக்கிறோம். அதிலே ஓரளவுக்கு சில இடங்களில் கையகப்படுத்தப்பட்டு இருக்கிறது. மொத்தமாக கையகப் படுத்தினால்தான் அனைத்து வேலைகளையும் முழுமையாக பூர்த்தி செய்ய முடியும் என்ற அளவிலே இன்னும் கையகப்படுத்த வேண்டிய இடங்களின் பணிகளை இன்றைக்கு அரசு மேற் கொண்டிருக்கிறது. 4(1) கிளாசிபிகேஷன் நோட்டீஸ் எல்லாம்

1993 ஏப்ரல் 16]

கொடுத்திருக்கிறோம். 6(ஏ) நோட்டீஸ் பெறுவதற்காக மாவட்ட ஆட்சித் தலைவரிடத்தில் ஒப்புதல் பெறவிருக்கிறோம். இது நெடுங்காலமாக இருக்கின்ற திட்டம் என்பதை இந்த அரசு அறியும். அந்தப் பகுதியிலே போக்குவரத்து பாதிக்கப்பட்டிருக்கிறது என்பதையும் இந்த அரசு அறியும். பல்வேறு நேரங்களிலே நாங்களே அந்தப் பகுதிகளிலே செல்கின்ற போது போக்குவரத்து பாதிக்கப்படுகிறது என்பதும் தெரியும். ஆகவேதான் முனைப்பான நடவடிக்கையை இந்த அரசு பொறுப்பேற்றதற்குப் பின்னாலே எடுத்திருக்கிறோம் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன் நீதி மன்றத்திலே இருக்கின்ற சிக்கல்களைப் பற்றி நீங்கள் அறிவீர்கள். சில பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக உடனடியாக இந்த அரசு நடவடிக்கை எடுத்திக்கிறது. வெகு விரைவிலே இந்தப் பணி முடிக்கப்படும் என்பதை மாத்திரம் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எ. தெய்வநாயகம் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த பரங்கிமலை, பழவந்தாங்கல் சுரங்கப்பாதை அமைக்கும் பணி சிறப்போடு செயலாற்றப்பட்டுக்கொண்டிருக்கிறது என்று மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் கூறினார்கள். இந்தப் பாலத்தைப் பொறுத்த மட்டிலே புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய தொகுதியான பரங்கிமலையில் அவர்கள் காலத்திலே இது முயற்சி செய்யப்பட்ட பாலம். கோர்ட் ஆணை தடையாக இருந்தாலும் அது எவ்வளவு காலத்தில் முடியும்; அதற்கு பணம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பழவந்தாங்கல் சுரங்கப்பாதைக்கு 168 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதைப் போல பரங்கிமலை சுரங்கப்பாதைக்கு 250 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே சொன்னதைப் போல, ஏற்கனவே ஒப்புதல் அளிக்கப்பட்ட திட்டம். இந்த நில எடுப்பு சம்பந்தமான நீதிமன்ற பிரச்சினையின் காரணமாகத்தான் பல்வேறு தடைகள் அங்கே ஏற்பட்டன. அதற்குப் பின்னாலே எங்களுடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் பொறுப்பு ஏற்றதற்குப் பின்னாலேதான் உடனடியாக அந்த இடத்தை நேரில் சென்று பார்வையிட்டு இந்தப் பணியை முடிக்கிவிட வேண்டும் என்பதற்காக அதிலே சட்டச் சிக்கல்கள் போன்ற பிரச்சினைகள் இருந்தன. அவைகளை எல்லாம் சட்ட நிபுணர்களை வைத்து ஆராய்ந்து, நம்முடைய சட்டத்துறையோடு கலந்து பேசி பல நடவடிக்கைகளை நாங்கள் இன்றைக்கு எடுத்திருக்கின்ற காரணத்தினாலே, அந்த நிலம் கையகப்படுத்துகின்ற பணிகளுக்குரிய முழுமையான நடவடிக்கை இன்றைக்கு எடுக்கப்பட்டிருக்கிறது. அதற்குரிய பணிகள் முடிக்கப்பட்டவுடன், நீதிமன்றத் தடைகள் நீக்கப்பட்டவுடன் உடனடியாக வேலை துவங்கப்படும்.

ஆகவே பணம் ஒதுக்கீட்டிலே எந்தப் பிரச்சினையும் கிடையாது. நீதிமன்றத் தடையின் காரணமாகத் தான் பிரச்சினை இருக்கிறது. அதுவும் விரைவிலே களையப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள் கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 374, திரு. ப. கலியபெருமாள், இருக்கையில் இல்லை. திரு. இராம. இராமநாதன், மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

374—

கூட்டுறவு நியாயவிலைக் கடைகளில் மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகம் மூலம் பணியாளர்களை நியமித்தல்.

11430—திரு. ப. கலியபெருமாள்: மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

கூட்டுறவு நியாயவிலைக் கடைகளில் பணிபுரியும் பணி யாளர்களை மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தின் மூலம் அமர்த்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கூட்டுறவு நியாயவிலைக் கடைகளில் பணிபுரிய தேவையான ஆட்களை தேர்வு செய்ய ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு தேர்வுக் குழுவை அரசு அமைத்துள்ளது. உள்ளூர் தமிழ் தினசரி பத்திரிகைகளில் விளம்பரம் செய்து அதன் மூலம் விண்ணப்பம் செய்யும் நபர்களையும், நியாயவிலை கடைகள் செயல்படும் கிரா மத்தைச் சார்ந்தவர்களின் பட்டியலை வேலை வாய்ப்பகங்கள் மூலம் பெற்று, அப்பட்டியலில் உள்ள நபர்களையும், இக்குழு நேர்முகத் தேர்வு நடத்தி, தேர்வு செய்கிறது. இவ்வாறு தேர்வு செய்யப்பட்டவர்கள் கூட்டுறவு நியாயவிலைக் கடைகளில் பணி யிலமர்த்தப்படுகிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள் கிறேன்.

திரு. இராம. இராமநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் இந்த தெளிவான விளக்கத்திற்கு முதலில் நன்றி சொல்கிறேன். தற் போது நியாய விலைக்கடைகள், அங்காடிகளில் எல்லாம் ஒரு பணியாளர் இருந்து கொண்டு அவரே அளந்தும் பொருள்களைக் கொடுக்கிறார். அதே போல ரசீதும் அவரே போட்டுக் கொண் டிருக்கிறார். அவர்கள் தாங்களாகவே ஒருவரை வேலைக்கு அமர்த்திக்கொண்டு அவரை வைத்து அந்த வேலைகளை வாங்கிக்